பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 4 (19—12—67) செவ்வாய் ★ வெளியூர்: மார்கழி 5 (20—12—67) புதன் [இதழ்: 156

8,705 பேர்களில் 205 பேர் மட்டுமே தேர்வு பெற்றனர்!

''கருநாடக மாநிலத்தில், அண்மையில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி பொதுத் தேர்வில், வெற்றி பெற்றவர்கள் நூற்றுக்கு 2 பேர்; மொத்தம் தேர்வு எழுதிய 8,705 பேரில், வெற்றி வெற்றவர்கள் 205 பேர்தான்; இது எனக்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்துள்ளது''

என, மாநில கல்வியமைச்சர் கூறியிருக்கிறார்.

சங்கரி இடைத் தேர்தல்



கழக வேட்பாளர்

சி. வீரமணி

நாடாளுமன்றத்தில்

வடக்கு---தெற்கு மோதல்

இந்தி வெறியர்களின் உள்ளக்கிடக்கை வெளிப்பட்டது

கேரள உறுப்பினருக்கு எதிராக உரிமைப் பிரச்சினை-- கழக உறுப்பினர்களின் எதிர்ப்புக் குரல்

புதுடில்லி, டிச. 19—

வடநாட்டவர்களுக்கு ஒரு நீதியும், தென்னாட்டவர்களுக்கு ஒரு நீதியும் கற்பித்துப் பாரபட்சம் காட்டுவதாக நாடாளுமன்றத்தில் நேற்று குறிப்பிடப்பட்டது.

கடந்த சனியன்று இந்தித் திணிப்பு மசோதாவின்மீது வாக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தின் இடைவெளியில், கேரள புரட்சி சோஷலிஸ்டு உறுப்பினர் ஸ்ரீகண்டன் நாயர் அவர்கள் வெளியேற விரும்பியதையொட்டி நேர்ந்த சம்பவங்கள் குறித்து நேற்று மீண்டும், இந்தி வெறியர் மது லிமாயி என்பவரால் பிரச்சினை கிளப்பப்பட்டது.

ஸ்ரீகண்டன் நாயர்மீது மது லிமாயி உரிமைப் பிரச்சினை ஒன்று கொண்டுவந்து, தென்னாட்டவர்கள்மீது தமக்குள்ள பொதுவான வெறுப்பைக் காண்பித்துக் கொண்டார்.

மது லிமாயி கொணர்ந்த உரிமைப் பிரச்சினை, கடந்த வாரம் வரையில் புயலென அடித்த மொழி மசோதா மீதான விவாதத்தின் தொடர்ச்சியாகவே நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

"மொழி மசோதாவின்மீது வாக்கெடுப்பு நடைபெற்றிருக்கும் நேரத்தில், ஸ்ரீகண்டன் நாயர் அவையிலிருந்து வெளியேற முயற்சித்ததாகவும், அவர் போகும்போது அவையை அடுத்துள்ள 'லாபி'யின் மூன்று கண்ணாடிகளை நொறுக்கியதாகவும், இது, 'உறுப்பினர் அத்துமீறி நடந்துகொண்டதையும் அவைக்கு இழுக்கேற்பட்டிருப்பதையும் காட்டுவதாக'விம் மது லிமாயி தனது உரிமைப் பிரச்சினை பற்றித் தெரிவித்தார்.

மொழி மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது ஸ்ரீகண்டன் நாயர் தெரிவித்த கருத்துக்களைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாமலிருப்பதை மது லிமாயி காண்பித்துக் கொண்டார்.

'ஸ்ரீகண்டன் நாயர் மொழி மசோதாவின்மீது பலபடச் சொன்னார் என்றாலும், சனியன்று அவர் நடந்துகொண்டது சரியல்ல' என்பது மது லிமாயியின் வாதம்.

மது லிமாயி கூற்று பற்றித் தாம் சொல்ல நினைப்பதை விளக்குமாறு ஸ்ரீகண்டன் நாயர், அவைத் தலைவரால் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

தமது நிலைமையை விளக்கி ஸ்ரீகண்டன் நாயர், 'மொழி மசோதா வாக்கெடுப்புக்குள்ளான போது தாம் பெரிதும் உணர்ச்சிக்கு ஆட்பட்டதாகவும், அவையிலிருந்து வெளியே செல்ல வேண்டுமென்று விரும்பிப் போனபோது வாயிற் கதவுகள் மூடப்பட்டிருந்ததாகவும்' குறிப்பிட்டு அவர் தொடர்ந்து பேசுகையில் விளக்கியதாவது:—

"கதவுகள் மூடப்பட்டிருந்ததைக் கண்டதும், வாயிற் காவலர்களிடம் நான், அதைத் திறக்குமாறு கேட்டுக்கொண்டேன்; 'அவைக்குள்ளாகவே நான் ஒரு கைதியைப்போல் அடைத்துவைக்கப் படக்கூடாது' என்று அவர்களிடம் தெரிவித்தேன்; ஆனால் அவர்கள், 'கதவுகளைத் திறந்துவிடுமாறு எங்களுக்கு உரிய சட்டங்கள் பிறப்பிக்கப்படவில்லை' என்று மறுத்துவிட்டார்கள். அதற்குப்பிறகு நான், பிரச்சினையை அவைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததன் விளைவாக வாயிற் கதவுகள் திறக்கப்பட்டன. நான் 'லாபி'யை நோக்கிச் செல்லுகையில், கதவுகளுடன் மோதிக் கொள்ள நேர்ந்தது.

மது லிமாயி குறிப்பிட்டுள்ளது போல், மசோதாவின்பேரில் வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நான் வெளியே செல்லவில்லை; இரண்டு வாக்கெடுப்பு நிகழ்ச்சிகளுக்கு இடையில்தான் நான் வெளியே போக முயன்றேன் என்பதை அவையின் நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து அவைத் தலைவர் அறியலாம்.

ஆகவே, வாக்கெடுப்பின்போது வெளியில் சென்றதாகவும், இது அவையின் முறைகளுக்கு விரோதமென்றும் வாதிடும மது லிமாயியின் கூற்றை நான் மறுக்கிறேன்."

இவ்வாறு விளக்கிய சீகண்டன் நாயர், மேலும் உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டதாவது:—

நாட்டின் ஒற்றுமை குலைந்துவிடுவதற்கான நிலைமை அன்று இருந்ததைக் கண்டு நான் மனம் வெதும்பினேன்.

சுதந்தரத்திற்காகவும் அதைப் பெறுவதற்காக நடைபெற்ற போராட்டங்களிலும் பெரும் பங்கு கொண்டிருக்கிறேன்.

சுதந்தரப் போராட்டவாதியாகப் பலமுறை நான் சிறை சென்றிருக்கிறேன்; இப்போது, காங்கிரசு ஆட்சியின் கீழும் அவ்வாறு சிறைப்படுவதற்கு நான் அஞ்சவில்லை!

நாட்டில் சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான பணிகளில் என்னுடைய பங்கினைச் செலுத்தி இருக்கிறேன். இப்போது இங்கு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கும் மது லிமாயியும், அவரை ஆதரிக்கும் ஜார்ஜ் பெர்னாண்டஸ் என்பவரும் அப்போதெல்லாம், அறியாச் சிறுவர்களாக இருந்தனர்; ஆகவே, என் தொண்டு பற்றி இவர்களுக்குத் தெரியாது.''

தாம் முறையற்று நடந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

பிடிக்காதவர்களை ஒடுக்கவா புதிய மசோதா?

தேவையில்லாத நேரத்தில் முறையற்ற சட்டம் ஏன்?

நாடாளுமன்றத்தில் வெ. கிருஷ்ணமூர்த்தி கண்டன முழக்கம்!

புதுடில்லி, டிச. 19—

பிரிவினைப் பிரசாரம் செய்வோர்—அதற்காகப் பாடுபடுவோர்—நாட்டு விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியவர்களுக்குத் தண்டனையளிப்பதற்காக என்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைத் தடுப்பு மசோதாவின் மீது இன்று சூடான கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன; கழக உறுப்பினர்கள் கடும் கண்டனக் குரல்களை எழுப்பினர்.

கழக உறுப்பினர் திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து பேசினார்; 'இந்த மசோதா அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதுதானா என்பதைத் தலைமை நீதிமன்றத்திடம் கேட்டறியக் குடியரசுத் தலைவருக்கு இதனை அனுப்பிவைக்க வேண்டும்' என்பதே அவர் கொணர்ந்த திருத்தம்.

அவர் பேசியதாவது:—

"இந்த மசோதா தேவையானதோ, உரிய நேரத்தில் கொண்டுவரப்பட்டதோ அல்ல!

சீன—பாகிஸ்தான் படையெடுப்புகளின்போதுதான் இது தேவைப்பட்டது; அப்போதெல்லாம் இத்தகைய ஒரு சட்டத்தின் துணையின்றியே நிலைமையைச் சமாளித்துவிட்டோம். இந்த நேரத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது?

காரணம் எதுவுமின்றி—கொடுங்கோல் முறையில் கொண்டுவரப்பட்ட இந்த மசோதா முறையாக உருவாக்கப்படவுமில்லை.

இந்த மசோதா நிறைவேறினால்,

'பாகிஸ்தானுடன் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள எல்லையோரக் கிராமங்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும்' என்று கூறுவதுகூடக் குற்றமாகிவிடும்.

'பாகிஸ்தான் ஆதிக்கத்தில் சட்டவிரோதமாகப் பல்லாயிரக் கணக்கான சதுர மைல் பரப்புள்ள காஷ்மீர்ப் பகுதிகள் (ஆசாத் காஷ்மீர்) இருபது ஆண்டுகளாக இருக்கின்றன; இதை மீட்பதற்கு இந்த அரசு என்ன செய்தது?' என்று கேட்பதும் சட்டவிரோதமாகிவிடும்.

'பாதுகாப்புக்காகப் பல கோடி ரூபாய் செலவிடுவதைத் தவிர்க்கப் பாகிஸ்தானுடன் எல்லை பற்றிய ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்' என்று கூறுவதும், புதிய சட்டத்தின்படி குற்றமாகிவிடாதா?

இம்மசோதாவின் நோக்கம் பிரிவினையை ஒடுக்குவதா? பிடிக்காத எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதா?—என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

'சி. பி. ஐ.' என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிற மத்திய புலனாய்வுத் துறையை, 'சவாண் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன்' என்றால்கூடப் பொருத்தமாகவே இருக்கும்!

காங்கிரசல்லாத மாநில அரசுகளைப் பற்றித் துப்பறிவதை அணுகுவதில், உள்நாட்டமைச்சர் சவாண், சாமர்த்தியமான வழி ஒன்றை வகுத்துள்ளார்.

மேற்கு வங்கக் கூட்டணி ஆட்சியை நீக்குவதுபற்றி நக்சல்பாரி நிகழ்ச்சிகளின் போதே சவாண் சிந்திக்கத் தொடங்கினார்.

அவர் இப்படி ஒரு புலனாய்வைத் தமிழக அரசுக்கு எதிராக நடத்தி நாடாளுமன்றத்தின் முன், 'இதே சி. பி. ஐ.' என்று கூறமாட்டார் என்பதற்கு என்ன உறுதிப்பாடு உள்ளது?;

வடக்குவேறு--தெற்குவேறு!

இரண்டும் முற்றிலும் மாறுபட்டவை

அமெரிக்கப் பயணியின் அனுபவம்

சென்னை, டிச. 18—

'தென்னிந்தியா வட இந்தியாவிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவும், வேறு நாடாகவும்படுகிறது; இங்குள்ள மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்களாக இருக்கிறார்கள்; வடக்கிலுள்ளவர்களைக் காட்டிலும் தெற்கிலுள்ள பெண்கள் மிகவும் அழகாக இருக்கிறார்கள்''

என்று மோட்டார் சைக்கிளிலேயே 16,000 மைல் சுற்றுப்பயணம் செய்து நேற்று சென்னை வந்துசேர்ந்த அமெரிக்கப் பயணியான ஐக் டெய்லர் என்பவர் கருத்தறிவித்திருக்கிறார்.

இவர், அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர்னியா மாநிலத்தின் உயர்தரப் பள்ளி ஒன்றின் ஆசிரியர் ஆவார். ஆறு வாரமாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்த்து பயணம் செய்துவிட்டு சிங்கப்பூர் போகும் வழியில் இப்போது சென்னையிலிருக்கிறார்.

"இந்தியச் சிற்பங்கள் உலகிலேயே அற்புதமானவை; இந்திய மக்கள் கலையுள்ளம் படைத்தவர்கள்; இந்த நாடு என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டது; மீண்டும் ஓர் முறை இங்கு வருவதற்கே விரும்புகிறேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்.பி.
திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 4 (19—12—67) செவ்வாய்

ஆங்கில நீடிப்புக்கு முற்றுப்புள்ளி!

ஆட்சிமொழித் திருத்த மசோதா, நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

'இந்தியுடன் ஆட்சிமொழியாக ஆங்கிலமும் நீடித்து இருந்துவரவேண்டும் என்ற கருத்துக்குச் சட்ட உருவம் கொடுப்பதே, இத்திருத்த மசோதாவின் உள்ளடக்கம்' என, தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார் அவர்களால் விளம்பரம் செய்யப்பட்டது.

"'ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாக—இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரையில்—நீடித்து இருந்துவரும்' என காலஞ்சென்ற பண்டித நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும்—'தலைமை அமைச்சர்கள்' என்ற முறையில்—கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பதற்கே இத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்றும் இந்திரா காந்தியார் விளக்கம் தந்தார்.

ஆனால், இன்று சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சிமொழித் திருத்தச் சட்டமோ, 'ஆங்கில மொழியும் ஆட்சிமொழியாக நீடித்திருந்துவரும்' என முன்னாள் தலைமை அமைச்சர்கள் இருவரும் தந்த வாக்குறுதிகளை, ஆழக் குழிதோண்டிப் புதைத்தேவிட்டது!

இப்புதிய ஆட்சிமொழித் திருத்தச் சட்டம், இந்தி ஆதிக்கத்துக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டது!

இச்சட்டத்தின் துணைகொண்டு, அரைகுறையாக இந்தி மொழி மட்டுமே கற்றிருப்பவர்கள்கூட இந்திய அரசாங்கத்திலும், அதன் தொடர்புடைய அமைப்புக்கள் அனைத்திலும் தலைமை அதிகாரிகளாக அமர்ந்துவிடக்கூடும்.

இந்தி வெறியர்களின் ஆதிக்கத்தின்கீழ்—இத்திருத்தச் சட்டத்தின் மூலம்—இந்தியா இறுதியாகக் கொண்டுவரப்பட்டுவிட்டது!

இத்திருத்த மசோதா, துவக்கத்தில் உருவாக்கப்பட்ட உருவத்தில், அதை, 'கிடைத்தவரையில் ஆதாயம்' என்ற கருத்தில் ஆதரிக்க விரும்பிய அனைவரும், புதிய திருத்தங்களுடன் சட்டமாக நிறைவேற்றப்பட்டதைக் கண்டு வேதனைக்குள்ளாகி உள்ளனர்.

புதிய திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இச்சட்டத்தைக் கண்டு, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களேகூட, கண்ணைப் பிசைந்துகொள்ளுகின்றனர்.

துவக்கத்தில் உருவாக்கப்பட்ட மசோதாவுக்குக் கொண்டு வந்த திருத்தங்களின் முழு விளைவுகளை ஆரம்பத்தில் தாம் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டதாகவும், இம்மசோதாவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானத்தினால் பெருந்தொல்லைகளை எதிர்நோக்க வேண்டிய கட்டாயம் இந்தி பேசாத மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது எனவும், ஆந்திரக் காங்கிரசார் ஒருவர் கவலை தெரிவித்திருக்கின்றார்.

"மசோதாவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானம், 'இந்தி ஆதரவாளர்கள் தென்னிந்தியர்கள் மீது இந்தியைத் திணிக்க முயற்சிக்கின்றனர்' என்ற மறுக்க முடியாத கருத்தை உண்டாக்கியுள்ளது; இந்த மனப்போக்கின் பலனாக, ஆந்திரர்கள் இந்தியைக் கற்காமல் போகலாம்" என்றும், மற்றொரு ஆந்திரக் காங்கிரசுக்காரர் கருத்தறிவித்திருக்கின்றார்.

"வட்டார மொழிகள் அனைத்துக்கும் ஒத்த நிலை காங்கிரசுக் கட்சி கொடுத்திருக்கிறது என்ற அற்புதம் உடைத்தெறியப்பட்டுள்ளது; தங்களுக்கு விருப்பமான மொழிகளையே காங்கிரசார் ஆதரித்துள்ளனர்" என்று கோவாவைச் சேர்ந்த உறுப்பினர் கூறியுள்ளார்.

"ஆங்கில மொழியின் இறுதி துவங்கிவிட்டது என்பதற்கு இச்சட்டம் ஒரு சான்று"

என ஜனசங்கத்தைச் சேர்ந்த பால்ராஜ் மதோக் முழக்கமிட்டிருக்கின்றார்.

"1963-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தினால் கூடுமானவரை இந்தி மொழிக்கும் ஆங்கில மொழிக்கும் இருந்த ஒத்தநிலையை, இத்திருத்தச் சட்டம் அழித்துவிட்டது; இதனால் இரு மொழிக் கொள்கைக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது"

என்றும்,

"இத்திருத்தச் சட்டமானது—உணர்வைப் பொறுத்தவரையில்—இந்தி பேசாத மக்களுக்கு நேரு தந்திருந்த வாக்குறுதியை முறித்துப் போட்டுவிட்டது"

என்றும்,

"1963-ம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டத்தில் தெளிவற்ற முறையில் ஆங்கில மொழிக்குத் தரப்பட்டிருந்த பாதுகாப்பும், இப்புதிய மசோதாவினால் தகர்க்கப்பட்டுவிட்டது"

என்றும்,

"இதன்விளைவாக, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த பல துறைகளில் ஆங்கிலம் அகலுவதால் ஏற்படக்கூடிய வெற்றிடத்தில் இந்தி மொழி நுழைந்துவிடும்"

என்றும்,

"அப்பொழுது இயற்றப்பட்ட சட்டத்தின் 3-வது பிரிவு இப்பொழுது திருத்தப்பட்டிருப்பதால், ஆங்கிலத்துக்கு பெரும் சரிவு ஏற்பட்டிருக்கிறது"

என்றும்,

"மசோதாவும், அத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற மொழிக் கொள்கைத் தீர்மானமும், இந்தி பேசாத மாநிலங்களுக்குப் பெருந்தடையாக அமைந்திருக்கிறது என்ற உண்மையை, நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் சவாண் அவர்களே ஒப்புக்கொண்டுள்ளார்"

என்றும்,

"மத்திய அரசாங்க அலுவல்களில் நுழைகின்ற இந்தி பேசாத மாநிலத்தவர், தன் தாய்மொழியுடன் ஆங்கில மொழியையும் கற்றிருக்க வேண்டி இருக்க, இந்தி மாநிலங்களிலிருந்து அப்பணியினை ஏற்றுக்கொள்ளுகின்ற ஒருவர் தம் தாய்மொழியை மட்டும் பயின்றிருந்தால் போதுமானதாகும்"

என்றும், மெயில் ஆங்கில நாளிதழில், மோகன்ராம் என்பவர் விளக்கிக் கூறியுள்ளார்.

'புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போய்விட்டது' எனச் சொல்லத்தக்கவிதத்தில் பழைய ஆட்சிமொழிச் சட்டத்தின் மூலம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு இருந்துவந்த ஆட்சிமொழிச் சலுகையையும் இப்புதிய சட்டம் பறித்துவிட்டிருக்கிறது. இப்புதிய சட்டத்தை, 'ஆங்கில நீடிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட சதித் திட்டம்' என்றுதான் தீர்மானிக்க வேண்டும்.

—இரா. செ.

பேச்சு ஒன்று--செயல் வேறு!

ஆங்கில எதிர்ப்பாளர்களின் சாயம் வெளுக்கிறது!

புதுடில்லி, டிச. 19—

நாடாளுமன்றத்திலும், பொது மேடைகளிலும், 'ஆங்கிலம் ஒழிக' என்று வாய் கிழிய முழங்கும் பல இந்தித் தலைவர்கள், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைத்திருப்பது இந்திப் பள்ளிக்கூடங்களில் அல்ல—ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில்தான்!

அமைச்சர்கள்—அரசியல் தலைவர்கள்—இந்தி எழுத்தாளர்கள் உட்படப் பத்திரிகையாளர்கள், தங்கள் குழந்தைகளை, 'கான்வெண்ட்' பள்ளிகளிலும், பொதுப் பள்ளிகளிலும் படிக்க வைக்கிறார்கள்!

புதுடில்லியில் மாடர்ன் ஸ்கூல், செயின்ட் கொலம்பஸ் ஸ்கூல் போன்ற செல்வர்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க இத்தலைவர்கள் எவ்வளவு முயற்சி செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது!

இப்பள்ளிகளில் 150 மாணவர்களுக்கே இடமிருக்கும்போது, 500 மனுக்கள் வந்து குவிகின்றன! இவற்றில் ஜனசங்கத் தலைவர்கள் தீவிரமாக முனைகிறார்கள்! டில்லி ஜனசங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அரிதயாள் தேவியின் மகள், ஒரு கான்வெண்ட் பள்ளிக்கூடத்தில் படிக்கிறாள்; டில்லியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று எம்.பி.-க்களின் குழந்தைகளும், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளில் படிக்கிறார்கள்!

காங்கிரசுத் தலைவர்களை எடுத்துக்கொண்டால், செகசீவன்ராம், டாக்டர் இராம் சுபாக் சிங், தாரகேசுவரி சின்கா, வி. சி. சுக்லா, கே. சி. பந்த் ஆகியோரின் குழந்தைகளும், நெருங்கிய உறவினர்களும், கான்வெண்ட் பள்ளிகள் அல்லது ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கிறார்கள்!

இது மட்டுமா? பக்ருதீன் அலி அகமத், குரேஷி, இந்தர் குஜ்ரால், டி. என். சிங், மனுபாய் ஷா, சி. சுப்பிரமணியம், பி. எஸ். மூர்த்தி, கே. கே. ஷா, டாக்டர் கே. எல். ராவ் ஆகியோரின் குழந்தைகளும், கான்வெண்ட் பள்ளிகளில் படிக்கிறார்கள்!

காலஞ்சென்ற தலைமையமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியின் மகனும் கான்வெண்ட் பள்ளியில் படிக்கிறார்கள்!

உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் முக்கிய நகரங்களில் இந்தித் தலைவர்களும், இதேபோலவே நடந்துவருகிறார்கள்!

தலைவர்களில் மது லிமாயி ஒருவர் தான் விதிவிலக்கு; அவரது மகன், துலியா என்னுமிடத்தில் மராத்தி மொழிப் பள்ளியில் படிக்கிறான்!

குறித்துவைத்துக் கேளுங்கள்!

★

ஆட்சி மொழித் (திருத்த) மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில்,

★ 'தமிழ் மட்டுமே தெரியும்; இந்தி தெரியவில்லை' என்பதற்காக இந்தியத் துணைக்கண்டத் தலைநகரில் தமிழ்மகன் ஒருவர் பட்டப்பகலில் கடுமையாகத் தாக்கப்பட்டார்!

★ நாளிதழ்கள் சில—அவை தமிழில் செய்திகளை விளக்கின என்பதற்காகவே—டில்லியில் கொளுத்தப்பட்டன!

★ தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் மூவர்—அவர்கள் இந்தி தெரியாதவர்கள் என்பதற்காகவே—ஆக்ராவில் தடுத்து நிறுத்தப்பட்டு அடிக்கப்பட்டனர்!

★ இந்தி அல்லாத பிற மொழிக் குழந்தைகள் பயிலுகின்ற பள்ளிகள் தாக்கப்பட்டன! குழந்தைகள் வீதிகளில் அடிக்கப்பட்டார்கள்!

★ மோட்டார் வண்டிகளின் ஆங்கில எண் பலகைகள் அடித்து நொறுக்கப்பட்டன!

★ அரசியல் சட்டத்தில் இல்லையென்றாலும், 'இந்தி எண் தான் வண்டிகளில் இருக்க வேண்டும்' என வற்புறுத்தி வன்முறையில் இறங்கினர்!

★ நமது நாட்டு சட்டம்—அமைதி—நாகரிக அரசியல் அத்தனையும் அயலார் நிறைந்த தலைநகர் டெல்லியில் சிரிப்பாய்ச் சிரித்தன!

இவ்வளவுக்கும் பாராளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்களோ, மத்திய அமைச்சர்களோ, மற்றும் தென்னாட்டவருக்கு 'உபதேசம்' செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களோ, இந்தி வெறியவர்களின் வன்முறை குறித்து வாய் திறக்கவில்லை—கண்டனக் குரல் எழுப்பவில்லை!

அங்கு நடைபெற்ற அராஜகங்களில் 'மக்களின் உணர்ச்சி கொப்பளித்த'தாம்!

ஆனால்

இங்கு மக்கள் தமது மொழிக்காக–தமது சந்ததிகளின் பாதுகாப்புக்காக–தாம் 'இரண்டாந்தரக் குடிமகனாக ஆகக்கூடாது' என்ற உறுதியை வெளிப்படுத்துவதற்காக

தமிழ் மொழியின் மேன்மை பற்றிப் பேசினால்—

இந்தி மொழியின் ஆதிக்கம் பற்றிக் கண்டித்தால்—

வடக்கத்தியாரின் வஞ்சகத்தை விளக்கமாக மக்களிடம் எடுத்துரைத்தால்—

பிரதேச வெறி---

மொழிச் சண்டை---

குறுகிய போக்கு---

அரசியல்வாதிகளின் செய்கை---

என்று வசைபாடப் புறப்பட்டுவிடுவர்—காங்கிரசுக்காரர்கள்! அப்படிப்பட்டவர்கள் இனி உபதேசம் புரியவந்தால், டெல்லிச் சம்பவங்களின் பட்டியலை அவர்கள் முகத்திற்கு எதிராக நீட்டி,

'இவைகளுக்குப் பெயர் என்ன?'

என்று கேளுங்கள்!

இவர்கள்தான் நம்மை ஆளத்துடிக்கிறார்கள்!

அண்மையில் உத்தரப் பிரதேசத்தின் தலைநகரில் போலீசு அதிகாரிகளின் தேர்வு நடந்துகொண்டிருந்தபொழுது, 'தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களில் பேசப்படும் மொழிகள் எவை?' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, பட்டதாரிகளான விண்ணப்பதாரர்களில் ஒருவரால்கூட சரியான விடையைக் கூற முடியவில்லையாம்!

வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர், 'மதராசில் பேசப்படுவது மதராசி பாஷை; கேரளாவில் பேசப்படுவது கேரளீய பாஷை' என்று பதில் சொன்னார்களாம்!

இந்தி பேசுவோருக்கு அடிமையாகிவிட்டது மத்திய அரசு!

‘மொழியில் மிராசுத்தன்மை’ எனும் நச்சு மரம் வளர வழிகோலப்பட்டுவிட்டது!

“ஆட்சிமொழி மசோதாமீது விவாதம் நடைபெற்றபோது, மக்களவை—எல்லாக் கட்சி வேறுபாடுகளையும் கடந்து, ‘இந்தி பேசுவோர்’—‘இந்தி பேசாதோர்’ என்ற இரு கட்சிகளைக் கொண்டதாகக் காட்சியளித்தது! ‘நாட்டிலும் அத்தகைய இருவகையான பிளவை ஏற்படுத்திவிடுமோ’ என்று அஞ்சத்தக்கவகையில், விவாதம் இருந்தது!

“இதனால்தான், நான் பேசும்போதுகூட, ‘விஞ்ஞான வளர்ச்சியிலே அரசு வெற்றியடையாவிட்டாலும் இந்திய அரசியல் வானில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத ‘இந்தி பேசும் இந்தியா’—‘இந்தி பேசாத இந்தியா’ என்கிற இரண்டு செயற்கைக் கோள்களை அனுப்புகின்ற முயற்சியில் அரசு வெற்றியடைந்துவிட்டது’ என்று குறிப்பிட்டேன்.

“மத்திய அரசு, இந்தி பேசுவோருக்கு அடிமையாகி பேத உணர்வை விதைத்துவிட்டது! இந்த நச்சு மரம், இந்திய அரசியல் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல!

“இதுவரை நடந்த மொழி மசோதா விவாதத்தில், தென்னாட்டவரின் மனதைப் புண்படுத்திய பேச்சு, விபூதி மிஸ்ரா எனும் இந்திக்காரரின் பேச்சுத்தான்; ‘ரூ. 25 தந்தால், தென்னகத்தவர் இந்தியைப் படித்துவிடுவார்கள்’ என்று அவர் குறிப்பிட்டது, இந்தி வெறியர்களின் உண்மையான உருவத்தைக் காட்டிவிட்டது! ‘இன்றைய இந்தியாவில், இந்திக்காரர்களே எசமானர்கள்; மற்ற மொழிக்காரர்கள் அடிமைகள்’ என்ற மிராசு மனப்பான்மையை அது தெளிவாகக் காட்டிவிட்டது!

“பொருளாதாரத்திலுள்ள மிராசுத்தன்மை சரித்திரத்தின் சவுக்கடி பெற்று சவக்குழிக்குள் போய்க்கொண்டிருக்கும்போது, மொழியில் மிராசு மனப்பான்மை கொண்டோரின் ஆதிக்கம் எத்தனை நாள் இருந்துவிடப் போகிறது!

“மொழியை, தென்னாட்டவர்—குறிப்பாக தமிழினம்—சிறப்பாகத் தி. மு. கழகம் உயிர்ப் பிரச்சினையாகக் கருதுகிறது என்பதை அறியாமல், இந்திக்காரர்கள் கனவுலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்—என்பதைத்தான் விபூதி மிஸ்ராவின் பேச்சு காட்டுகிறது!

“இந்தி மொழி ஆதிக்க மொழியாகத் தமிழகத்தில் புகுந்து சாம்ராஜ்யம் நடத்த வேண்டுமானால், அது, தியாக உணர்வுமிக்க நாலரைக் கோடித் தமிழர்களின் சாம்பல் மேடுகளின் மீதிருந்துதான் ஆட்சி நடத்த முடியும் என்பதை, வடபுலத்து இந்தி வெறியர்களுக்கு நாடாளுமன்றத் தி. மு. கழகம், தனது கட்டுக்கோப்புமிக்க பேச்சாலும் கட்டுப்பாடுமிக்க செயலாலும் தெரிவித்திருக்கிறது! இந்த எச்சரிக்கை ‘சமிக்ஞை’யைப் புரிந்துகொள்வார்களா இந்திக்காரர்கள் என்பதை, காலம்தான் நமக்கு எடுத்துரைக்க வேண்டும்!”

---முரசொலி மாறன்

(செய்தியாளர்களிடம்)

முன்னோடிச் சமூகத்திற்கு மூண்டுவரும் தீங்குகள்!

உலகத்தின் எல்லாச் சமூகங்களைக் காட்டிலும் தமிழ்ச் சமூகமே பெண்மைக்கும்—பெண்களுக்கும் பெரும் உரிமையும் மதிப்பும் கொடுத்ததாகும்!

உலகின் முதுமை இலக்கியங்கள் பெண்களால் ஆக்கப்பட்டதாகத் தமிழகத்தில்தான் அதிகம் உண்டு. புகழோடு ஆண்டு பெருமையோடு இன்றும் நினைவுகூர்ந்து கொண்டிருக்கும் அரசிகளும் தமிழ்ச் சமூகத்தில் நிரம்ப உண்டு!

ஆனால், அத்தகு தமிழ்ச் சமுதாயம், இன்று, பெண்களின் அதிகாரத்தில்தான் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பது வரலாற்றின் விநோதமே ஆகும்!

உலகின் முதல் பெண் தலைமையமைச்சராக இலங்கையில் பொறுப்பேற்ற திருமதி பண்டாரநாயகா ஆட்சியில்தான், தமிழர்களுக்குப் பெருஞ் சோதனையும், பலத்த அவமானமும் பெருகின!

திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சியில் இலங்கையில் தமிழ் பேசும் குற்றத்திற்காகவே இரண்டாந்தரக் குடிமக்களாகவும், சொந்த நாட்டிலேயே இலங்கைத் தமிழர்கள் அந்நியர்கள் போலவும் ஆக்கப்பட்ட அவலம் நடைபெற்றது!

திருமதி பண்டா—திருவாளர் சாஸ்திரி ஒப்பந்தம், தமிழர்கள் பேரில் வஞ்சம் தீர்த்துக்கொள்ள விரும்பிய சக்திகளுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தமாகவே தமிழர்கள் தலையில் வந்து விடிந்தது!

அதற்கடுத்து, உலகின் இரண்டாவது பெண் தலைமையமைச்சராக வாய்ந்த திருமதி இந்திரா காந்தி, திருமதி பண்டாவையும் மிஞ்சித் தமிழர்களின் ‘அந்தஸ்தை’த் துண்டிரண்டாக ஆக்கிவிட்டார்!

இன்று தமிழன், தனது சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரக் குடிமகன் ஆகிவிட்டான்!

அவனுடைய இலக்கியம்—இளமைத் தமிழ்—தொட்டனைத்திலும் துலங்கும் அவன் அறிவு—அவன் வீரம்—அவன் தன்மதிப்பு—ஆகிய அத்தனையும், திருமதி இந்திராவின் இந்தி மொழியால் அறைகூவலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன!

பெண்மைக்குத் தமிழன் கொடுத்த மதிப்பும்—அளிக்கும் மரியாதையும்—பெரிது! பெரிது!

பெண்களின் ஆட்சியில் அவன் அடையும் அவதி அதைவிடப் பெரிது! கொடிது!

உலகில் முதன் முதலில் பெண்மையின் பெருமையை அறிந்த தமிழர், அதைத் தொடர்ச்சியாக வழிவழிப் பேணிக் காக்காமல், இடையில் துவளவிட்ட குற்றத்திற்காகப் பெண்மை இப்படிப் பழிவாங்குகிறதா?

மதிப்புரை

‘தேனும் தென்றலும்’

“இனிப்பையும் இதய உணர்ச்சியையும் மட்டுமல்ல—உடலுக்கு வலுவினையும், உள்ளங்களுக்கு இடையே தொடர்பினையும் ஊட்ட வல்லது தேன்—தென்றல் இரண்டும்” என்ற முன்னுரையுடன், **தங்கவயல் லோகிதாசன்** அவர்கள் தயாரித்திருக்கும் ‘தேனும் தென்றலும்’, படித்து மகிழ்ந்து, சிந்தித்துத் தேக்கிவைக்கக்கூடிய பலவகைப்பட்ட புதிய தகவல்களைக் கொண்ட இலக்கியப் படைப்பாக இருக்கிறது.

‘தென்றல்தான் தேனை விளைவிக்கிறது’ என்பதே, பெரும்பாலோருக்குச் சற்று நிதானித்து நினைத்துப் பார்த்தால்தான் புரிகிறது!

‘தேனை அளிப்பது மலரல்லவா?’ என்று பதட்டத்துடன் கேட்பவர்கள், ‘ஆமாம்; அந்த மலர் மலருவதும், அது, வண்டுகளை வசீகரிப்பதும், வண்டுகள் இல்லாமலேகூட மகரந்தப் பொடிகள் ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்குச் செல்வதற்கும் காரணமாக அமைவது தென்றல்தானே?’ என்றால், ‘ஆமாம்’ என இறுதியில் ஒப்புவர்.

இப்படி, ‘தெரிந்தும் தெரியாத’ பல தகவல்கள், பழைய தமிழ்ப் பாடல்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன!

அவைகளையெல்லாம் தென்றல் போல் சுமந்துவந்து, தேனைப் போல் இனிக்கவும்—பயனளிக்கவும், திரு. லோகிதாசன் தந்துள்ள தொகுப்பு நூல்தான், ‘தேனும் தென்றலும்!’

பழங்காலத்தில் இலக்கிய நயத்துடன் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள், நாளாவட்டத்தில் மறைந்திருந்தால்கூட பரவாயில்லை; பொருளே மாறுபட்டு, புதிய—பொருந்தாத கருத்துக்களுக்கும் இலக்காகிவிடுகின்றன!

‘பதினாறும் பெற்று வாழ்க’ என்று பெரியவர்கள் வாழ்த்துவதை, இன்றும், பதினாறு பிள்ளைகளைப் பெற்று வாழச் சொல்லுவதாகப் பொருள் கொண்டுவிடும் போக்கு, தம்பதிகளிடம் மட்டுமல்ல—தம்பதிகளை வாழ்த்துபவர்களிடமும் காணப்படுவதனைக் காண்கிறோம்!

அந்தப் பதினாறும், ‘பதினாறு வகைச் செல்வங்களைக் குறிப்பவை’ என்பதை, இந்த நூலில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது!

‘நாயைக் கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம்’ என்ற ஒரு பழைய வழக்கும், நம்மிடையே பரவலாக பழக்கத்தில் இருந்துவருகிறது!

கல்லுக்கு ‘உயிர்க் கலை’ கொடுக்கும் சிற்பி ஒருவன், பாறை ஒன்றை நாயாக வடித்திருக்க வேண்டும்; பார்வையாளனாக வந்த ஒருவன், அதனை, ‘உயிருள்ள நாய்’ என நினைத்து அருகில் சென்று பார்க்க—அது, கல்லில் வடித்த சிற்பமாக இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு,

> “நாயைக் கண்டேன்—கல்லைக் காண முடியவில்லை; கல்லைக் கண்டேன்—நாயைக் காண முடியவில்லை”

எனத் திகைத்து வெளிப்படுத்திய வார்த்தைகள் — நாளாவட்டத்தில் திரிந்து—இன்று இருக்கும் வழக்குக்கு வந்திருப்பதை, பழம்பாடல் ஒன்றின் மூலம் மற்றோர் இடத்தில் விளக்கியிருக்கிறார், ஆசிரியர்:—

> “மாங்காய்ப்பால் உண்டு
> மலைமேல் இருப்பவர்க்குத்
> தேங்காய்ப்பால் ஏதுக்கடி—குதம்பாய்
> தேங்காய்ப்பால் ஏதுக்கடி?”

என்று! பொருள் பிரபலமாகாமல், பாடல் மட்டும் பிரபலமாகியிருக்கும் குதம்பைச் சித்தரின் மேற்கண்ட வரிகளுக்கும், நூலில் விளக்கம் கிடைக்கிறது!

> “வெட்டியதால் சாகவில்லை—
> வெட்டாவிட்டால் செத்திருப்பேன்;
> செத்ததால் சாகவில்லை—
> சாகாவிட்டால் செத்திருப்பேன்;
> வந்ததால் வரவில்லை—
> வராவிட்டால் வந்திருப்பேன்”

என்பவை, வெறும் சொற் சிலம்பம் மட்டுமல்ல—‘பழம்பாடல் வரிகளில் பொதிந்துகிடக்கும் விடு

(4-ம் பக்கம் பார்க்க)

உலகத் தமிழ் மாநாடு

‘யுனெஸ்கோ’ ஒப்புதல்

ரூ. 50000 மானியம் தருகிறது

சென்னை, டிச. 18—

சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு ‘யுனெஸ்கோ’வின் ஒப்புதல் கிடைத்திருக்கிறது: அத்துடன், அதற்கு அடையாளமாக சுமார் ரூ. 50,000 மானியமும் தரப்பட்டிருக்கிறது.

‘யுனெஸ்கோ’ என்பது, பொருளாதாரம் — அறிவியல் — மற்றும் பண்பாட்டுத் துறை வளர்ச்சிக்கான ஐ. நா. அமைப்பாகும்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சொற்பொழிவுகளை அச்சடித்து வெளியிடுவதற்குப் பயன்படுத்துவதற்காக இந்த மானியத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இத்தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ‘யுனெஸ்கோ’வின் இந்திய நாட்டுக் கிளை—தமிழகத் தொடர்பு அதிகாரி டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியம் கூறியிருப்பதாவது:—

“தமிழ் இலக்கியத்தின் மதிப்பு மற்றும் செழுமை—உலக நாகரிக வளர்ச்சிக்குத் தமிழர் வாழ்க்கை முறை செலுத்திய பங்கு ஆகியவற்றிற்குத் தரப்பட்ட தனிச் சிறப்பு இது!

“முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும், மாநாட்டு அமைப்பாளர்களாக உள்ள அவரது மற்ற சகாக்களுக்கும் தரப்பட்ட பாராட்டுமாகும் இது!”

கட்டாய இந்திக்குக் கருநாடகத்தில் ஏற்பட்ட கதி!

இந்திப் பரீட்சைக்கு வந்தாலே போதுமாம்

மாணவர்கள் நடத்திய போராட்டம் வெற்றி

கருநாடக மாநிலத்தில், “எஸ். எஸ். எல். சி. தேர்வில், ஒரு மாணவன் கட்டாய இந்தியில் ‘முட்டை’ (0) வாங்கியிருந்தாலும், மற்ற பாடங்களில் தேவையான மதிப்பெண்கள் வாங்கியிருந்தால், வெற்றி பெற்றவனாகக் கருதப்படுவான்”

என்று, மாநில கல்வியமைச்சர் சங்கர கௌடா கூறியிருக்கிறார்.

“இத்தனை ஆண்டுகளும், பள்ளிகளில் போதிய இந்தி ஆசிரியர்கள் இல்லாதிருந்தால், ஒவ்வொரு ஆண்டும் பள்ளி இறுதித் தேர்வின் போது இந்திக்கு விலக்கு அளிக்கப்பட்டு வந்தது; இப்பொழுது பள்ளிகளில் போதிய அளவிற்கு இந்தி ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டுவிட்டதால், 1968 முதல் எஸ். எஸ். எல். சி. தேர்வில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கும் என்று அரசு அறிவித்தது.

பல மாணவர்கள் கட்டாய இந்தியை எதிர்த்ததால், அந்த உத்தரவு இப்பொழுது திருத்தப்பட்டுவிட்டது.

புதிய உத்தரவின்படி, இனிமேல் “பள்ளி இறுதித் தேர்வின் போது ஒரு மாணவன் இந்தித் தேர்வுக்கு வந்திருந்தாலே போதும்; அவன் வெற்றி பெற்றுவிட்டதாகக் கருதப்படுவான்” என்றும் கல்வியமைச்சர் கூறியிருக்கிறார்.

பட்ட சூடு பலன் தருகிறது!

பீகார் கவர்னருக்கு டில்லியின் அறிவுறுத்தல்

“பீகார் மாநிலச் சட்டமன்றத்தை முந்திய தேதியில் கூட்டவேண்டுமென அமைச்சரவையை வலியுறுத்தி, நெருக்கடியைத் தோற்றுவிக்க வேண்டாம்”

என்று பீகாரின் புதிய கவர்னர் என். கனுங்கோவை, தலைமை அமைச்சரும், மத்திய அரசாங்கமும் கேட்டுக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மேற்கு வங்கத்தில், கவர்னர் தர்மவீரா செய்த தவறிலிருந்து மத்திய அரசு ‘நல்ல பாடம்’ கற்றுக்கொண்டது!

சந்தர்ப்பவாதிகள் — சுயநலவாதிகள்—சோசித் தளம் ஆகியவற்றின் உதவியின்றி, பீகாரில் பதவியைப் பிடிக்க முடியுமென்று காங்கிரசு உறுதியாக நம்புகிறதாம்!

மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி?

தற்போதைய சட்டமன்றத்தைக் கலைக்காமல், குறுகிய காலத்திற்கு மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிறப்பிப்பது குறித்து இந்திய அரசு ஆலோசித்து வருகிறது எனத் தெரிகிறது.

“நேரடியாகக் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்தால், தற்போதைய சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, மீண்டும் மறுதேர்தல் நடத்த வேண்டியிருக்கும்” என்று கூறி அதுல்யா கோஷ் எதிர்க்கிறார்; இதை, மொரார்ஜி தேசாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமாகக் கருத்துக் கொண்டிருப்பவர்களை மட்டுமே மேற்கு வங்கத்திற்கு அனுப்புமாறு செய்ய மத்திய அரசை, உமாயூன் கபீர் தூண்டிவருகிறார்!

மேற்கு வங்காளத்தில் நிர்வாகத்தைத் திறமையாகவும், கண்டிப்பான முறையிலும் நடத்துவதற்குத் தகுதியான அதிகாரிகளை மத்திய உள்துறை தேடிக்கொண்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகளுடன் உமாயூன் கபீர் பேச்சு நடத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

தற்போதைய டாக்டர் கோஷ் அமைச்சரவை ‘டிஸ்மிஸ்’ செய்யப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்பட்டால், கபீரும் அவரது சகாக்களும் ஏமாற்றம் அடைவார்கள்; ஆனால், மேறகு வங்காளத்தில், ‘அதிகாரம் வாய்ந்த முதலமைச்சர்’ போல கபீர் இருப்பதை, அதுல்யா கோஷ் விரும்பவில்லை!

ஆட்சி மொழி மசோதா :

மாணவர் உலகம் கிளர்ந்தெழுகிறது!

கேரளத்தில் இந்திப் பலகைகளை அகற்றி ஆர்ப்பாட்டம்

திருவனந்தபுரம், டிச. 18—

நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழித் திருத்த மசோதாவை எதிர்க்கும்வகையில் இன்று கேரளக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் புறக் கணிப்புச் செய்தனர்.

இங்கு கல்லூரி மாணவர்கள் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக்கொண்டு சென்றனர்.

அஞ்சல் - தந்தி நிலையங்களில் இருந்த இந்திப் பெயர்ப் பலகைகளையெல்லாம் அகற்றினர்.

பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் தங்கள் இறுதித் தேர்வையும் எழுதாமல் புறக்கணித்தனர். சமஸ்கிருதக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

அவர்கள் இண்டர்மீடியட் கல்லூரிக்குச் சென்று இந்திப் பரீட்சையின் வினா - விடைத் தாள்களைக் கிழித்தெறிந்து, தேர்வு நடக்க முடியாமற் செய்தனர்.

முதன் முதலில் அவர்கள் அரசுத் தலைமைச் செயலகத்தில் உள்ள இந்திப் பெயர்ப் பலகையை அகற்றிச் சேதப்படுத்தினர்.

அடுத்து, மத்திய அஞ்சல் நிலையத்துக்குச் சென்று அங்கிருந்த இந்தி எழுத்துக்களின்மீது சிவப்பு வர்ணத்தைப் பூசி அழித்தனர்; மலையாளத்தில் எழுதப்பட்ட ஒரு பலகையை மாட்டினர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைப் போலீசார் பின்தொடர்ந்து சென்றனர்.

வடக்கு--தெற்கு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டிருப்பதற்கு, ஸ்ரீகண்டன் நாயர் பதில் சொல்ல முற்பட்டபோது,

"நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் யார் அவ்வாறு முறையற்று நடந்துகொள்கிறார்கள் என்பது தங்களுக்கே தெரியாதா ?"

என்று அவைத் தலைவரைக் கேட்டார்.

இதையொட்டி, ஜார்ஜ் பெர்னண்டஸ் என்பவருக்கும்—அனந்தன் நம்பியாருக்கும் கடும் வாக்கு வாதம் துவங்கிற்று.

கழக உறுப்பினர்கள் வி. கிருஷ்ணமூர்த்தியும், கோ. விசுவநாதனும் விவாதத்தில் கலந்துகொண்டு உரிமைப் பிரச்சினை பற்றிக் கருத்தறிவித்தார்கள்.

"சீகண்டன் நாயர் தென்னிந்தியர் என்கிற ஒரே காரணத்திற்காக இந்த உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டிருக்கிறது; இதே மது லிமாயி, உக்கும் சந்த் கச்வால் என்ற இந்தி வெறியர் மொழி மசோதாவின் பிரதியை, அவையில் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொளுத்தியபோது எத்தகு எதிர்ப்பையும், உணர்ச்சியையும் காட்டிக்கொள்ளவில்லை; ஏனென்றால், 'கச்வால் வட இந்தியர்—நாயர் தென்னிந்தியர்' என்கிற பாகுபாடின்றி வேறென்ன?"

என்று கோ. விசுவநாதன் கேட்டார்.

சுதந்தரா உறுப்பினர் மினு மசானி என்பவர் குறுக்கிட்டு, 'நடந்தவை அனைத்தும் சரியானவை அல்ல; மசோதா நிறைவேற்றப்பட்டு விட்டதானாலும், அதன் தொடர்பாகக் கொதித்த வெப்பம் தணியவில்லை என்பதை இவை காட்டுகின்றன; எனவே, சீகண்டன் நாயர் தமது செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டால் சரியாகிவிடும்' என்றார்.

"நான் கொள்கையற்றிருக்கவில்லை; வருத்தம் தெரிவிக்கும் உத்தேசம் எனக்குக் கிடையாது"

என்று சீகண்டன் உறுதியாகத் தெரிவித்தார்.

நாயர் உறுதியாகத் தெரிவித்ததைக் கண்ட நாடாளுமன்ற விவகார அமைச்சர் ராம் சுபாக் சிங், நாயர் என்ன தெரிவித்தாரோ அவையே பிரச்சினையை முடிப்பதற்குப் போதுமானதாகும்; ஆகவே, நாயர் தெரிவித்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டு பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம்' என்று கருத்தறிவித்தார்.

மது லிமாயி இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை; தமது உரிமைப் பிரச்சினையை வலியுறுத்தினர்.

பிரச்சினையின் மீது நாளைக்கு முடிவு கூறுவதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

உலகிலேயே படுமோசமாக இந்தியா

பொருளாதார வளர்ச்சியில் பின்னோக்கிச் செல்கிறது

காங்கிரசு ஆட்சியின் 'சாதனை'--அமெரிக்க ஏடுதரும் 'நற்சான்று'

வாஷிங்டன், டிச. 18—

"உலகிலேயே இந்தியாவின் பொருளாதாரச் சாதனை மிகவும் மோசமானது"

என்று, 'வாஷிங்டன் போஸ்ட்' இதழின் புதுடில்லி நிருபர் எழுதுகிறார்.

"இந்தியாவின் சராசரி நபர் வருமானம் 64.20 டாலர்தான்" என, அப்பத்திரிகை கணக்கிடுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இது, 60 செண்டுகள் குறைவு.

"கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரம் தேக்க நிலை அடைந்திருப்பதைக் குறிப்பிடும் அரசு அறிக்கை, டில்லியில் அசட்டை செய்யப்படுகிறது" என அப்பத்திரிகை கூறுகிறது.

"சிறிதளவு தொழில்நுட்ப உதவியிலிருந்து இன்று எந்த நாடும் பயனடையாமலில்லை; ஆனால், உலகம் முழுவதன் அனுபவத்துக்கு மாறாக இந்தியா இருக்கிறது"

என அப்பத்திரிகை மேலும் கூறியது.

"இந்தியாவுக்குத் தேவைப்படும் ஒற்றுமை உணர்வையும், காரிய உணர்வையும் இந்திரா ஊக்குவிக்கவில்லை" என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

[3-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கதைகள்' என்பதனை, இந்த நூலின் மூலம் தெரிந்துகொள்ளும் போது, சுவையும் பயனும் நிறையக் கிடைக்கின்றன!

'நான்கு கோடி பாடல்களைப் பாட முடியுமா' என்று கேட்ட தோரணமைப் புலவர்களை நோக்கி, நானே நான்கு கருத்துக்களை ஒவ்வொன்றினையும் இரண்டடிகளில் பாடி, 'ஒவ்வொரு கருத்தும் ஒரு கோடி பெறும்' என, ஔவையார் பாடியுள்ள பாடல் ஒன்றும் இந்த நூலில் எடுத்தாளப்பட்டிருப்பது, அனைத்துக்கும் மகுடமிட்டாற் போன்று அமைந்திருக்கிறது!

இன்னா நாற்பது - இனியவை நாற்பது ;—சிந்தாமணியில் சிந்திய மணிகள் ;—வேமன்னவின் வேத வாக்கு போன்ற இலக்கிய வரிசைகளை ஏற்கனவே உருவாக்கியிருக்கும் லோகிததாசனின் இந்தத் 'தேனும் தெள்ளமுதும்' ஓரி நிலையத்தினரின் ஐந்தாவது வெளியீடாக இருக்கிறது.

பள்ளிக்கூட மாணவர்கள் மட்டுமின்றி வாழ்க்கையில் பெரியவர்களும் படித்து பயன்பெறப் பல புதிய தகவல்களையும், இலக்கிய நயங்களையும் உள்ளடக்கிய இத் தொகுப்பு நூல், நூல் நிலையங்களில் வைத்துப் பயன்படத்தக்க நல்ல சேர்க்கையாகும்.

ரூ. 2 விலையுள்ள இந்நூல் கிடைக்குமிடம் :—

ஓரி நிலையம்,
45, எஸ். பி. சந்நிதித் தெரு,
இராயப்பேட்டை—சென்னை-14.

—எஸ். ஆர்.

குடிசைக்குத் தீ வைத்த காங்கிரசுக்காரருக்குக் கடுங்காவல் தண்டனை

சென்னை, டிச. 18—

குடிசைக்குத் தீ வைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த பட்டு என்னும் பத்மநாபனுக்கு நான்காண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தார் —சென்னை அடிஷனல் செஷன்சு நீதிபதி.

கடந்த ஜூலை 5-ம் நாள் இராஜா அண்ணாமலைபுரம் அருகில் உள்ள ஆண்டிமான்யத் தோட்டத்தில் நாராயணசாமி என்பவரின் மெக்கானிக் கொட்டகைக்குத் தீயிட்டு, அதன்மூலம் 137 குடிசைகளை அழித்ததாக எதிரிமீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியின் விளக்கம் நம்பத்தக்கதாக இல்லை என்றும், மெக்கானிக் கொட்டகைக்குத் தீ வைப்பது எதிரியின் நோக்கமாகத் தோன்றுகிறது என்றும் எதிரி சமூக விரோதி என்பதும், சமூகத்துக்கு அபாயமானவர் என்பதும் அவர் நடத்தையால் உறுதியாகியுள்ளது என்றும், ஆகவே, 'கடுந் தண்டனையளிப்பது அவசியம்' என்றும் நீதிபதி கூறினர்.

தண்டனையடைந்த பத்மநாபன், மாம்பலம் கண்ணம்மாபேட்டையைச் சேர்ந்தவர்; காங்கிரசுக்காரர்; ஜவகர் சனநாயக சங்கம், லால்பகதூர் சாஸ்திரி சேவா சங்கம் ஆகிய காங்கிரசு சங்கத்தின் உறுப்பினர் என்று கூறப்படுகிறது.

பிர்லாவின் பத்திரிகைக்கு அரை கோடி ரூபாய்!

ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் தருகிறதாம்

புதுடில்லி, டிச. 19—

பிர்லா குடும்பத்தாரின் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நிறுவனத்திற்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், ரூ. 50 இலட்சம் கடன் அளித்திருக்கிறது.

'இந்துஸ்தான் டைம்ஸ்' தற்போது புதுடில்லி கர்சான் சாலையில் 17 மாடிக் கட்டிடம் ஒன்றை கட்டி வருகிறது; இந்தக் கட்டிடம் கட்டுவதற்கு ஆயுள் இன்சூரன்சுக் கழகம் ரூ 50 இலட்சம் கடன் தருகிறது. இக்கட்டிடத்தின் ஒரு பகுதி, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வாடகைக்கு விடப்படுமாம்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு

அகவிலைப் படி உயர்வு

சென்னை, டிச. 18—

மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்த மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.

நவம்பர் முதல் நாளிலிருந்து இந்த அகவிலைப் படி உயர்வு செயல்படுத்தப்படும்.

ரூ. 6 முதல் 33 வரை இந்த உயர்வு இருக்கும்; முழுவதும் பணமாகவே கொடுக்கப்படும்.

அனைத்திந்தியத் தொழிலாளர் பண்டவிலைக் குறியீட்டு எண்ணின் 12 மாத சராசரி 1967 அக்டோபரில் 205-ஐக் கடந்துவிட்டதால், கஜேந்திர கட்கார் ஊதிய நிர்ணயக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இந்த உயர்வு அளிக்கப்படுகிறது.

மாதம் ரூ. 450-க்குக் குறைவாக ஊதியம் பெறுவோர் ரூ. 6 முதல் ரூ. 10 வரை உயர்வு பெறுகின்றனர்; ரூ. 450 அல்லது அதற்கு மேல் ஊதியம் பெறுவோர்—ஆனால் ரூ. 499 வரை ஊதியம் பெறுவோர் ரூ. 33 உயர்வு பெறுவர்.

பம்பாய் -- தாராவி தி.மு.க. ஆண்டு விழா

கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"பம்பாய் — தாராவி திராவிட முன்னேற்றக் கழக 18-வது ஆண்டு நிறைவு விழாவினை மிக்க சீரும் சிறப்புடனும் நடத்திட, தாராவி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

விழாவில் கலந்துகொள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெய்வீகன், மாயவன், அன்புச் செழியன், சுபரவேலு ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்ச்சி சிறப்புற அமைய கழகத் தோழர்களும், துணை மன்றத் தோழர்களும் நன்கொடைகள் தந்துதவி, நிகழ்ச்சி வெற்றியுற அமைய ஒத்துழைக்க கிளைச் செயற்குழுவினர் பெரிதும் விரும்பிக் கேட்டுக்கொள்கின்றனர்"

என்று, எஸ். தியாகராசன் அறிவிக்கிருர்.

குழுக் கூட்டம்

"விருத்தாசலம் வட்ட தி. மு. க பொது உறுப்பினர் கூட்டம், 21—12—67 பிற்பகல் 2-மணியளவில் விருத்தாசலம் பயணர் விடுதியில், கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் தொ. பிச்சைமுத்து அறிவிக்கிருர்.

புதிய ஏடுகள்

'சூட்டுக் கோல்' என்னும் வார இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் ஆத்தூர் கழகத் தோழர் இரா. சௌந்தரராசனும், அச்சிடுபவராக திருமகள் அச்சக உரிமையாளர் திரு. வேலாயுதமும் சேலம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இவ்விதழ் பொங்கல் நாளன்று வெளிவரும்.

* * *

'சீரணி' என்னும் திங்கள் இதழ், திரு. ஆர். வி. நன்னன் அவர்களைப் பொறுப்பாசிரியராகவும், வள்ளுவன் அவர்களைச் சிறப்பாசிரியராகவும் கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

* * *

'முகில்' என்ற கவிதைத் திங்கள் இதழ், புலவர் இளஞ்செழியனை ஆசிரியராகவும், திரு. ஏ. வி. கிருட்டினமூர்த்தியைப் பொறுப்பாசிரியராகவும் கொண்டு திருச்சியிலிருந்து தை முதல் நாள் வெளிவர இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நடக்க இருப்பவை

21--12--67

சென்னை 40-வது வட்டம்

பேராசிரியர் க. அன்பழகன் மன்றத் துவக்க விழா; மாலை 7-மணிக்கு ஞானமாணிக்க செட்டி தெருவில்; தலைவர் : வ. மணிவண்ணன் ; பேசுவோர் : அமைச்சர் மா. முத்துசாமி, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, டாக்டர் எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ., நீலநாராயணன், டபிள்யூ. பி. பி. சுந்தரம், சு. கணபதி.

விருத்தாசலம்

வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு வானொலித் திடலில்; தலைவர் : தொ. பிச்சைமுத்து; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.சி., கோவை செழியன் பி.ஏ., இரா. சாம்பசிவம், ஆ. தங்கவேலு, ஏ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஏ. கிருட்டினன் எம்.எல்.ஏ., எம். செல்வராசு, க. இராமலிங்கம் பி.ஏ.பி.எல்., து. பொன்னுசாமி, வி. இராமச்சந்திரன் பி.ஏ.பி.எல்., ஆர். கரிகாலன், ஏ. இராமசாமி, எம். சிதம்பரம்.

அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

டிச. 22 காலை 9-மணி : மரக்காணம்; 9-45 மணி : தாழங்காடு—பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளித் திறப்பு விழா; 11 மணி : கூனிமேடு— பள்ளி வாசல் திறப்பு விழா : பிற்பகல் 2-மணி : முதுகரை — பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளித் திறப்பு விழா ; 3-மணி : மதுராந்தகம் —தலைமை மருத்துவமனையில் 'எக்ஸ்-ரே' பகுதிக்கு அடிக்கல் நாட்டுதல்; மாலை 4-மணி : மதுராந்தகம்—அராபியப் பள்ளி ஆண்டு நிறைவு விழாவில் பங்கு கொள்ளுதல்; 5-மணி : மதுராந்தகம்—செங்கற்பட்டு மாவட்ட கிராம நல சீரணிப் படையினரின் கண்காட்சி விழாவில் பங்கு கொள்ளுதல்.

அமைச்சர்

சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

டிச. 20 : காலை 10 மணி : குன்னம்—மகளிர் மன்றத் திறப்பு விழா; இரவு 7 மணி : திருச்சி பொதுக் கூட்டம்.

கிருஷ்ணராயபுரம் தொகுதி

நிகழ்ச்சிகள்

டிச. 21 : காலை 8-30 மணி : லாலாபேட்டை ஊராட்சி வரவேற்பு; 9 மணி : பிள்ளாபாளையம் ஊராட்சி வரவேற்பு; 9-45 மணி : மேட்டு மகாதானபுரம் தாய்—சேய் நல விடுதி அடிக்கல்நாட்டு விழாவும், பொதுமக்கள் வரவேற்பும்; 10-30 மணி : கம்மநல்லூர் பொதுக்கள் வரவேற்பும், பட்டா வழங்கலும், பஞ்சாயத்து அலுவலக அடிக்கல் நாட்டு விழாவும்; 11-30 மணி : திருக்காம்புலியூர் பொதுமக்கள் வரவேற்பு; 12 மணி : கீழ மாயனூர் பட்டா வழங்கலும், பொதுமக்கள் வரவேற்பும்; பிற்பகல் 1 மணி : மணவாசி பஞ்சாயத்து வரவேற்பு; 1-30 மணி : கோரக்குத்தி ஆரம்பப் பள்ளி அடிக்கல் நாட்டு விழா ; 2 மணி : பசுபதி பாளையம் தையல் மெஷினும், பட்டாவும் வழங்கல்; மாலை 4 மணி : தம்மநாயக்கம்பட்டி காதணி விழா; 5-45 மணி : பஞ்சப்பட்டி பொதுமக்கள் வரவேற்பு; 6-30 மணி : போத்தராவுத்தம்பட்டி பஞ்சாயத்து வரவேற்பு; இரவு 7-15 மணி : பாப்பக்காபட்டி பொதுமக்கள் வரவேற்பு; 8-15 மணி : வயலூர் ஆரம்பப் பள்ளி அடிக்கல்நாட்டு விழாவும், பஞ்சாயத்து வரவேற்பும்.

அமைச்சருடன் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பெ. சௌந்தரபாண்டியன் எம்.ஏ.பி.எல்., திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம், கு.வீ. முத்துசாமி, ஆர். என். இராமசாமி ஆகியோரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர்.